ரூ.928 கோடியில் பாமாயில், துவரம் பருப்பு கொள்முதல்!

# விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள்!

## உணவு - உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!



சென்னை, ஜூலை 16-
விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த 928 கோடி ரூபாய் மதிப்பிற்குப் பாமாயில் மற்றும் துவரம் பருப்பு கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை வருமாறு :-

வெளிச்சந்தையில் விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்தவும் மக்களுக்கு ஊட்டச்சத்து கிடைத்திடவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கடந்த 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் 10.07.2023 அன்று அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களுடன் விலைவாசி உயர்வு தொடர்பாக நடத்திய ஆய்வுக் கூட்டத்தினைத் தொடர்ந்து என் தலைமையிலும் தலைமைச் செயலாளர் முன்னிலையிலும் விலைக் கட்டுப்பாட்டு குழுக் கூட்டம் 11.07.2023 அன்று நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களும் ஒன்றிய வர்த்தகம் & தொழில் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொதுவிநியோகத் திட்டம் மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டிற்கு மாதம் ஒன்றிற்கு 10,000 மெட்ரிக் டன் கோதுமை மற்றும் 10,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு ஒதுக்கீடு செய்திடக் கோரி கடிதம் எழுதியிருந்தார். விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்தும் விதமாக, உடனடியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2023 மாதங்களுக்குத் தேவையான 40,000 மெ.டன் துவரம் பருப்பு 464.79 கோடி ரூபாய்க்கும் ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2023 மாதங்களுக்குத் தேவையான 5.10 கோடி பாமாயில் பாக்கெட்டுகள் 463.48 கோடி ரூபாய்க்கும் மொத்தம் ரூ.928.27 கோடி மதிப்பில் கொள்முதலுக்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. துவரம் பருப்பு மற்றும் பாமாயில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அனைத்து மண்டலக் கிடங்குகளிலும் இறக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அந்தக் கிடங்குகளிலிருந்து நியாயவிலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்குத் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தக்காளி விலை உயர்வினால் பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருக்க நியாயவிலைக் கடைகள் மூலமாக தக்காளி கிலோ ஒன்றிற்கு 60 ரூபாய் விலையில் வழங்கப்பட்டுவருகிறது. இன்று முதல் சென்னையில் ஏழு அமுதம் அங்காடிகளிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் ஏழு நியாயவிலைக் கடைகளிலும் தக்காளி கிலோ ஒன்றிற்கு 60 ரூபாய்க்கும் துவரம் பருப்பு அரை கிலோ 75 ரூபாய்க்கும்

உளுந்தம் பருப்பு அரை கிலோ 60 ரூபாய்க்கும் விற்கப்பட்டு வருகிறது.

இதற்குத் தமிழ்நாடு அரசால் பராமரிக்கப்பட்டு வரும் விலைக் கட்டுப்பாட்டு நிதி பயன்படுத்தப் படுகிறது.

குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத்துறை மூலமாகவும் இன்றியமையாப் பொருள்கள் பதுக்கப்படாமலிருக்கவும் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் விலைவாசி உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருக்க மேற்குறிப்பிட்டவாறு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

## ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!




---

கன்னியாகுமரி பகவதியம்மன்

# கோயிலுக்குச் சொந்தமான ரூ.18 கோடி மதிப்பிலான சொத்து மீட்பு!

## இந்து சமய அறநிலையத்துறை நடவடிக்கை!

சென்னை, ஜூலை 16-
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று முன்தினம் (14.07.2023) கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி, பகவதியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.18 கோடி மதிப்பீட்டிலான தானியக் களஞ்சியம் திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி, பகவதியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான தானியக்களஞ்சியம் திருக்கோயில் அருகில் 36 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ளது. இது திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் பூஜை செய்வதற்கும், கூட்டு பிரார்த்தனை செய்வதற்கும் வெங்கடாஜலம் ஐயர் என்பவருக்கு தேவஸ்தானம் அனுமதி வழங்கியிருந்தது. வெங்கடாஜலம் ஐயர் மோசடியாக ஆவணம் தயார் செய்து இச்சொத்தில் தேவஸ்தானம் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை (Permanent Injection) கோரி நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். மேலும், மேற்படி இடத்தினை திருக்கோயில் நிர்வாகம் சுவாதீனம் எடுத்துவிடக் கூடாது என்பதற்காக பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இது தொடர்பான அனைத்து வழக்குகளிலும் திருக்கோயில் நிர்வாகம் சரியான நடவடிக்கை மேற்கொண்டு இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 78-ன் கீழ் திருநெல்வேலி இணை ஆணையர் நீதிமன்றத்தில் திருக்கோயில் சார்பில் எதிர் தரப்பினர் மீது வழக்கு தொடரப்பட்டதில் மேற்படி தானியக் களஞ்சியத்தை சுவாதீனம் எடுக்க உத்தரவிடப்பட்டது.

இந்த உத்தரவினை எதிர்த்து விஸ்வ இந்து வித்யா கேந்திரா தலைவர் வேதாந்தம் என்பவர் சார்பில் ஆணையர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு (Revision Petition) தாக்கல் செய்யப்பட்டது. அதன் விசாரணை முடிவுற்று தீர்ப்பு வழங்க இருந்த நிலையில் வேதாந்தம் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆணையரது சீராய்வு மனுவில் தீர்ப்புரை வழங்கக்கூடாது என கோரியிருந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்றமானது இணை ஆணையரின் சட்டப்பிரிவு 78-ன் உத்தரவினை செயல்படுத்த தடை ஏதுமில்லை என்று உத்தரவிட்டுள்ளது.

அதனை தொடர்ந்து நீதிமன்ற உத்தரவின்படி நேற்று முன்தினம் (14.07.2023) கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் இணை ஆணையர் டி.இரத்தினவேல் பாண்டியன், நாகர்கோவில் உதவி ஆணையர் திருமதி தங்கம் ஆகியோர் முன்னிலையில் காவல் துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களின் உதவியுடன் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட தானியக் களஞ்சியம் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.18 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது காவல்துறை சார் ஆய்வாளர் சுந்தரமூர்த்தி, பகவதியம்மன் திருக்கோயில் மேலாளர் எஸ்.ஆனந்த், ஆய்வாளர்கள் சுஜீத், திருமதி சாந்தி மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

---

சாலை விபத்தில் உயிரிழந்த

# 3 பேரின் குடும்பங்களுக்கு - தலா ரூ.2 லட்சம் நிதி!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்!

சென்னை, ஜூலை 16-
சென்னையில் இருந்து புதுச்சேரியை நோக்கி கிழக்கு கடற்கரை சாலையில் ஆட்டோவில் பயணம் செய்த 6 நபர்கள் பேருந்து மோதி சம்பவ இடத்திலேயே உயிரிந்தனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் அவர்கள் தலா 2 லட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியாக அறிவித்தார்கள்.

அதனை தொடர்ந்து நேற்று முன்தினம் (14.7.2023) ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் விபத்தில் உயிரிழந்தவர்களின் 3 பேரின் குடும்பத்திற்கு தலா ரூ.2 லட்சம் வீதம் ரூ.6 லட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார். எஞ்சிய 3 நபர்களுக்கு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ஆ.ராகுல்நாத், காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின்போது ஆலந்தூர் வட்டாட்சியர் துளசி ராம், ஆலந்தூர் மண்டல குழு தலைவர் என்.சந்திரன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் பி.குணாளன் ஆகியோர் உடன் இருந்தனர்.




பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய நூலக கூட்ட அரங்கில் வாசகர் வட்டம் சார்பில் 13.07.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தலைமையேற்று உலக புத்தக தின போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டி, கொடையாளர்களை கௌரவித்து சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட மைய நூலக அலுவலர் அ.பொ.சிவக்குமார், மண்டல தலைவர் மதிவாணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

தமிழ்நாடு அரசின்

# சதுப்பு நில மேம்பாட்டுப் பணிகள் பாராட்டுக்குரியவை!

## கோவளத்தில் மரக்கன்றுகளை நட்டப்பிறகு ஒன்றிய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் பேச்சு!

சென்னை, ஜூலை 16-
செங்கல்பட்டு மாவட்டம், கோவளம் அரசு மேல்நிலைப்பள்ளி அருகே நேற்று முன்தினம் (14.07.2023) கடற்கரை கழிமுகப்பகுதி உவர் நிலங்களில் சுற்றுச்சூழல் காத்திடும் அலையாத்தி காடுகள் உருவாக்கிட மிஷ்டி இயக்கம் மூலம் அலையாத்தி மரக்கன்றுகளை ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் நடவு செய்தார்.

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டின் இரண்டாவது அதிக பரப்பளவினை கொண்ட கடற்கரை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புயல் சீற்றத்தினை தடுத்திட அலையாத்தி காடுகள் மேம்பாடு மிகவும் பயனுள்ளதாகும். மிஷ்டி இயக்கத்தின் மூலம் தமிழ்நாடு அரசு முன்னெடுத்துள்ள கடற்கரை கழிமுகப்பகுதிகளான, உவர் நிலங்களில் உள்ள அலையாத்தி காடுகளை பாதுகாப்பதிலும், புதியதாக அலையாத்தி மரக்கன்றுகளை வளர்ப்பதில் சமூக ஆர்வலர்களுடன் மேற்கொண்டு வரும் பணிகள் பாராட்டுக்குரியதாகும் என்றும், அலையாத்தி காடுகள் வளர்ப்பு மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு வனத்துறை, சமூக ஆர்வலர்கள், கடற்கரை பகுதி கிராம மக்கள், மாணவர்களை ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை திருமதி சுப்ரியா சாகு, தமிழ்நாட்டின் கடற்கரை உவர்நிலங்களில் அலையாத்தி காடுகள் மிஷ்டி இயக்கம் மற்றும் ஈரநில இயக்கம் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிக அளவு பரப்பளவில் அலையாத்தி காடு மரக்கன்றுகள் நடப்படுவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கவும், கார்பன் சமநிலை ஏற்படுத்தவும் தமிழ்நாடு அரசு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய அரசின் சிறப்புச் செயலாளர் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை சந்திர பிரகாஷ் கோயல், உலக சுகாதார நிறுவன ஆலோசகராக செயல்பட்ட திருமதி சௌமியா சுவாமிநாதன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) சுப்ரத் மஹாபத்ர, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ரா.ரெட்டி, சென்னை மண்டல தலைமை வனப்பாதுகாவலர் திருமதி கௌ. கீதாஞ்சலி, மாவட்ட வன அலுவலர் ரவி மீனா, சென்னை வன உயிரின காப்பாளர் ஈ.பிரசாந்த் மற்றும் கிராம பொது மக்கள், சமூக ஆர்வலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

---

விலைவாசி உயர்வு: கோவையில்

# ஒன்றிய அரசைக் கண்டித்துப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!



கோவை, ஜூலை 16-
நாடு முழுவதும் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் தக்காளி, வெங்காயம் , காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தத் தவறிய ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து நாளை (17.07.23) காலை 9 மணியளவில் சிவானந்தா காலனி ரத்தினபுரி பாலம் அருகிலிருந்து, டாடாபாத் பவர் ஹவுஸ் வரை கோவை மாநகர் மாவட்டக் கழக விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணியினரின் சார்பில் மாபெரும் கண்டன ஊர்வலம் நடைபெறுகிறதென்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் எக்ஸ் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த இரண்டு வாரங்களாக, மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் தக்காளி, வெங்காயம், காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வானது நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளது. விலை உயரப் போகிறது என்பதை முன்பே கணித்து செயல்பட்டிருக்க வேண்டிய ஒன்றிய பா.ஜ.க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததன் விளைவே இந்த விலை உயர்வு ஆகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த விலை உயர்வை கட்டுபடுத்த தமிழ் நாட்டில் ரேஷன் கடைகள் மற்றும் பசுமை பண்ணை கடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ.60 க்கு விற்பனை செய்யப்பட்டது.

மேலும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வினை கட்டுப்படுத்துவது தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடத்தி, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு என்ன காரணம் மற்றும் அதனை தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கை போன்றவை ஆலோசிக்கப்பட்டது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதோடு முடிந்தவரை விலை உயர்வை தடுக்கும் முயற்சிகளை எடுத்து வருகிறார்.

இந்நிலையில் நாடு முழுவதும் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் தக்காளி, வெங்காயம், காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தத் தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாளை (17.07.23 திங்கட்கிழமை) காலை 9 மணியளவில் சிவானந்தா காலனி ரத்தினபுரி பாலம் அருகிலிருந்து, டாடாபாத் பவர் ஹவுஸ் வரை கோவை மாநகர் மாவட்ட கழக விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணியினரின் சார்பில் மாபெரும் கண்டன ஊர்வலம் நடைபெற உள்ளது.

மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நடைபெற உள்ள இந்தக் கண்டன ஊர்வலத்தில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மேயர், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நிலைக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக்கழக செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள், செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் பெருந்திரளான அளவில், பங்கேற்க வேண்டும் என்று கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

மக்களின் அறிவுப்பசி போக்க - மதுரையில்!

# ‘கலைஞர் நூற்றாண்டு நூலகம்’ காணும் - முதல்வருக்கு நன்றி!

## அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழக மாநிலத் தலைவர் மு.ராஜேஸ்குமார் அறிக்கை!

சென்னை, ஜூலை 16-
மதுரையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் தமிழ்நாட்டின் தென்பகுதி மக்களின் அறிவுப் பசிக்கு சிறந்த இடமாக விளங்கும் என தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழகம் சங்கத்தின் சார்பில் அதன் மாநிலத் தலைவர் மு.ராஜேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

தென்னகத்தின் அறிவுக் களஞ்சியம். மதுரையின் பிரம்மாண்டம், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் எண்ணத்தில் உதித்த “கலைஞர் நூற்றாண்டு நூலகம்” ஆறு தளங்களுடன் நவீன காலத்திற்கேற்ற வகையிலான டிஜிட்டல் வடிவமைப்புடன் ரூ.206 கோடி மதிப்பில் 2.13 லட்சம் சதுர அடி பரப்பளவில் உருவாகியுள்ளது தமிழ்நாட்டின் தென்பகுதி மக்களின் அறிவுப் பசிக்கு சிறந்த இடமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

கல்விப்பணியில் நூலகங்கள் பெரும் பங்காற்றுகின்றன அந்த வரிசையில் பொது நூலகத்துறையின் மணிமகுடத்தில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் வைரமாக ஜொலிக்க தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழகம் சி & டி சங்கத்தின் சார்பில் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.